# தலைப்பு - 234

# உயர் நீதிமன்ற பதிவாளர் காரியாலயம்.

இலங்கை நீதிமன்ற முறைமையில் உள்ள உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்றமாகும். பிரதம நீதியரசர் உட்பட உயர் நீதிமன்ற நீதிபதிகள் 11 பேர்கள் அதிமேதகு ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர் என்பதோடு, ஏனைய சகல நீதிமன்றங்கள் தொடர்பாக மேன்முறையீட்டு நியாயாதிக்கம் அதனூடாக செயற்படுத்தப்படுகின்றது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் உயர் நீதிமன்றத்துக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பாக தத்துவம் வழங்கப்பட்டிருக்கின்றன.

## செயல்கள் :

- அடிப்படை உரிமை தொடர்பான நியாயாதிக்கம்.
- இறுதி மேன்முறையீட்டு நியாயாதிக்கம்.
- அறிவுறுத்தல் நியாயாதிக்கம்.
- தேர்தல் மனு (ஜனாதிபதி தேர்தல்) தொடர்பான நியாயாதிக்கம்.
- ஏதேனும் முறையிலான பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் தொடர்பான நியாயாதிக்கம்.
- பாராளுமன்றத்தின் மூலம் சட்டத்தினால் விதிக்கப்படக்கூடிய வேறு விடயங்கள் தொடர்பான நியாயாதிக்கம்.

  உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கைக்காக உதவி புரிவதோடு, அதற்காக நீதியமைச்சின் 234 தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

  உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் அலுவலகத்தின் பணிகள் பின்வருமாறு.

- உயர் நீதிமன்றத்தின் பதிவுகளைப் பேணுதல்.
- உயர் நீதிமன்றத்தில் கூட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் விண்ணப்பங்களுக்கு திகதியிடுதல்.
- நீதிமன்ற கட்டளைகளுக்கு மற்றும் வழக்குத் தீர்ப்புகளுக்கு ஏற்ப கூற்றுக்களை பதிவுசெய்தல்.
- சட்டத்தரணிகளை சேர்த்துக்கொள்தல்.
- மேன்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெறுகின்ற மேன்முறையீட்டு வழக்குகளின் பிரதிகளை தயாரித்தல், வழக்குச் செலவினங்களை மதிப்பீடு செய்தல்.

## 2017.12.31 ம் திகதியில் உயர் நீதிமன்ற ஊழியர்களின் விபரங்கள்.

| | அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | சேவையில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 05 | 06 |
| மூன்றாம் மட்டம் | 13 | 12 |
| இரண்டாம் மட்டம் | 111 | 73 |
| ஆரம்ப மட்டம் | 103 | 93 |

## உயர் நீதிமன்றத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் மற்றும் உண்மையான செலவினங்கள்.

| | மதிப்பீடு ரூ. | உண்மையான செலவினம் ரூ. |
|---|---|---|
| 2014 | 74,660,000.00 | 62,005,603.00 |
| 2015 | 95,240,000.00 | 81,036,020.00 |
| 2016 | 101,220,000.00 | 90,545,577.00 |
| 2017 | 109,755,000.00 | 97,482,785.00 |

**<u>உயர் நீதிமன்றப் பதிவாளர் திணைக்களத்தின் செயலாற்றுகை</u>**

**<u>01/01/2017 முதல் 31/12/2017 வரை</u>**

| **வழக்குகளின் தன்மை** | **2017/01/01 திகதிக்கு நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை** | **2017/01/01 முதல் 2017/12/31 வரை பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை** | **2017/01/01 முதல் 2017/12/31 வரை நிலுவையிலுள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கை** | **2017/01/01 முதல் 2017/12/31 வரை தீர்க்கப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை** | **2017/12/31 இல் உள்ளவாறான நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| அடிப்படை உரிமைகள் தொடர்பான விண்ணப்பங்கள் | 912 | 464 | 1376 | 371 | 1005 |
| விஷேட அனுமதிக்கான விண்ணப்பங்கள் | 482 | 296 | 778 | 223 | 555 |
| பாராளுமன்ற சட்ட மூலங்கள் தொடர்பான உயர் நீதிமன்றக் கட்டளைகள் | - | 34 | 34 | 34 | - |
| மேன்முறையீட்டு வழக்குகள் | 420 | 249 | 669 | 177 | 492 |
| வணிக மேல் நீதிமன்ற முன்முறையீட்டு வழக்குகள் | 197 | 57 | 254 | 37 | 217 |
| மேல் நீதிமன்ற விண்ணப்பங்கள் | 152 | 142 | 294 | 77 | 217 |
| எழுத்தாணை விண்ணப்பம் | 8 | 8 | 16 | - | 16 |
| மாகாண மேல் நீதிமன்ற மேன்முறையீட்டு வழக்குகள் | 1326 | 550 | 1876 | 412 | 1464 |
| மீள்நோக்கு வழக்குகள் | 16 | 7 | 23 | 8 | 15 |
| அரசியலமைப்பின் பொருட் கோடல்கள் தொடர்பான வழக்குகள் | - | - | - | - | - |
| நானாவித வழக்குகள் | 19 | 1 | 20 | 2 | 18 |
| SC TAB APPEAL | 1 | 3 | 4 | - | 4 |
| SC SPECIAL | 12 | - | 12 | 7 | 5 |
| SC/Contempt | 21 | 6 | 27 | 2 | 25 |
| **மொத்தம்** | **3566** | **1817** | **5383** | **1350** | **4033** |